அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி),
கோயம்புத்தூர் -18

2018 - 2021 ஆம் ஆண்டு இளங்கலை - அறிவியல்
பட்டம் பயிலும் இரண்டாமாண்டு மாணவர்களுக்குரியது.

தமிழ்த் துறை

நான்காம் பருவம் - தமிழ் - தாள் IV (18TAM41L)

தொகுப்பாசிரியர்கள் : கௌரவ விரிவுரையாளர்கள்

அலகு : 1 - முனைவர் வை. பாலசரஸ்வதி
முனைவர் கி. மலர்விழி

அலகு : 2 - முனைவர் வை. பாலசரஸ்வதி
முனைவர் கி. மலர்விழி

அலகு : 3 - முனைவர் கி. மலர்விழி

அலகு : 4 - முனைவர் க. தங்கராஜ்

அலகு : 5 - முனைவர் வை. பாலசரஸ்வதி

தமிழ்த்துறை

# அரசு கலைக் கல்லூரி

(தன்னாட்சி)

கோயம்புத்தூர்-18

## நான்காம் பருவம்

(2018-2021 ஆம் ஆண்டு இளங்கலை - அறிவியல் பட்டம் பயிலும் இரண்டாமாண்டு மாணவர்களுக்குரியது)

### பாடத் திட்டம்

### மொழிப்பாடம்

### தமிழ் - தாள் IV

அலகு 1

1. குறுந்தொகை (5 பாடல்கள்) - 1. (03) நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
   2. (183) சென்ற நாட்ட கொன்றை அம் பசுவீ
   3. (19) எவ்வி இழந்த வறுமையர் பாணர்
   4. (92) ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து
   5. (135) வினையே ஆடவர்க்கு உயிரே
2. நற்றிணை (2 பாடல்கள்) - 1. (06) நீர்வளர் ஆம்பல் தூம்புடைத் திரள்கால்
   2. (360) முழவுமுகம் புலர்ந்து முறையின் ஆடிய
3. அகநானூறு (2 பாடல்கள்) - 1. (20) பெருநீர் அழுவத்து எந்தை தந்த
   2. (123) உண்ணா மையின் உயங்கிய மருங்கின்
4. கலித்தொகை (2 பாடல்கள்) - 1. (101) தளிபெறு தண்புலத்துத் தலைபெயற்கு
   2. (7) வேனில் உழந்த வறிது உயங்கு ஓய்களிறு

அலகு 2

1. புறநானூறு (2 பாடல்கள்) - 1. (99) அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்
   2. (141) பாணன் சூடிய பசும்பொன் தாமரை
2. பத்துப்பாட்டு - 1. நெடுநல்வாடை (முழுவதும்)
3. திருக்குறள் (2 அதிகாரங்கள்) - 1. செய்ந்நன்றியறிதல்
   2. மருந்து
4. பழமொழி நானூறு (1 அதிகாரம்) - 1. அறிவுடைமை

அலகு 3 புதினம்

புத்துமண் - சுப்ரபாரதிமணியன்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 600 098

அலகு 4 மொழித்திறன்

1. **இலக்கணம் :**

திணை, துறை விளக்கம் (அகம், புறம்) (செய்யுள் பகுதியிலிருந்து - பாடம் தழுவியது)

2. **நோக்கு நூல் பயன்படுத்துதல்**
   i. அகராதி - விளக்கம், வகைகள் - சொற்பொருள் - சிறப்புப் பொருள் - பெயரகராதி - பயன்படுத்தும் முறை
   ii. நிகண்டு - நூல் விளக்கம் - வகைகள் - பார்க்கும் முறை

3. **இலக்கிய வரலாறு**

   1. i. சங்க இலக்கியம்

      ii. எட்டுத்தொகை

      iii. பத்துப்பாட்டு

   2. நீதி இலக்கியம்

   3. புதினத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

அலகு 5 படைப்பாற்றல்

1. **மொழிபெயர்ப்பு**

ஆங்கிலத்திலிருந்து தமிழில் அலுவலக வரைவுகள் - அலுவலகக் கடிதங்களை மொழிபெயர்த்தல்.

2. **சிறுகதை**

தலைப்பு, சூழல் கரு தந்து திறனை வெளிப்படச் செய்தல்

3. **ஓரங்க நாடகம்**

பாத்திரங்கள் கரு, தலைப்புதந்து, திறனை வெளிப்படச் செய்தல்.

# 1. குறுந்தொகை

கடைச் சங்க காலத்தில் தோன்றிய தொகை நூல்களில் ஒன்றாகிய குறுந்தொகை அகவற்பாவால் அமைந்த ஓர் அகநூலாகும். நாலடி முதல் எட்டடி வரை உள்ள பாடல்களே இந்நூலில் தொகுக்கப் பட்டுள்ளன. குறுந்தொகையில் காணப்படும் பாடல்கள் நானூற்றிரண்டு. ஒன்று கடவுள் வாழ்த்துப் பாடல். அப்பாடல் பாரதம் பாடிய பெருந்தேவனாரால் பாடப்பட்டது.

இருநூற்றைந்து புலவர்களால் பாடப்பட்ட இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ. ‘நல்ல குறுந்தொகை’ என்னும் அடை மொழிக்கு உரிய இந்நூலில் அரிய செய்திகள் காணப்படுகின்றன.

## 1. குறிஞ்சி

நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;
நீரினும் ஆர் அளவின்றே - சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே. (03)

தலைமகன் சிறைப்புறமாக, அவன் வரைந்து கொள்வது வேண்டி, தோழி இயற்பழித்த வழி, தலைமகள் இயற்பட மொழிந்தது.

- **தேவகுலத்தார்**

அலகு – I

1. **குறுந்தொகை :**

1. குறிஞ்சி – ஆசிரியர் : தேவகுலத்தார்

தலைவன் தலைவியைக் காண இல்லத்து அருகே சிறைப்புறமாக வந்து நிற்கின்றான். தலைவியை எப்போதும் இவ்வாறு வந்து சந்தித்துக் கொண்டிருந்த தலைவன் விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்த தோழி தலைவனை பலவாறு பேசுகிறாள். அதனால் தலைவி, தலைவனுடன் தனக்கு இருக்கும் காதலை வெளிப்படுத்துகிறாள்.

"தலைவி தலைவனிடம் கொண்ட அன்பானது வானை விட உயரமானது. நிலத்தை விட அகன்றது. கடலை விட ஆழமானது எனக் கூறுகிறாள். தலைவனின் மலை, பூக்கள் நிறைந்த மலைப்பகுதி, கரிய வண்டுகள் மிகுந்த தேனை சேகரித்துச் செல்லும் இயற்கை வளம்மிக்க மலைநாட்டுக்குரியவன் என்பதையும் இப்பாடல் வெளிப்படுத்துகிறது. குறிஞ்சி மலையின் வர்ணிக்கும் வகையில் இப்பாடல் வரிகள் அமைந்துள்ளன.

## 2. முல்லை

சென்ற நாட்ட கொன்றைஅம் பசுவீ
நம்போல் ப்சக்கும் காலை, தம்போல்
சிறுதலைப் பிணையின் தீர்ந்த நெறி கோட்டு
இரலை மானையும் காண்பர்கொல், நமரே! -
புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை
மென்மயில் எருத்தின் தோன்றும்
புன்புல வைப்பிற் கானத் தானே. (183)

பருவ வரவின்கண் ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

- ஔவையார்

## 2. முல்லை : ஆசிரியர் ஔவையார்

கார்காலத்தின் வருவதாகச் சென்ற தலைவன் இன்னும் வரவில்லை, ஆனால் அவன் சென்ற நாட்டில், கொன்றை மலர்கள் சூழல் காரணமாய் வெளிரிக் கிடக்கும். அதுவும் நம்மைப் போல் பசலை நோய் பெற்றது போல் இருக்கும். அதைத் தலைவன் காண்பான். சிறு தலையில் பெரிய கொம்புகளை உடைய ஆண்மான்கள் தனது பிணையைப் பிரிந்து நிற்கும் காட்சியைக் காண்பான் தலைவன் என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள். மேலும் அத்தலைவனுடைய (காடு) முல்லை நிலத்து காயாப்பூக்கள் மயிலின் கழுத்தை ஒத்து நீண்டு இருக்கும். காயாம் பூக்களைப் போல காட்சி தரும். நாட்டிற்குரிய தலைவன் என்பதை ஔவையார் உரைக்கிறார். இப்பாடலில் முல்லை நிலமாகிய காட்டை வர்ணிப்பது புலவர்களின் சிறப்பாகிறது.

## 3. மருதம்

எவ்வி இழந்த வறுமையர் பாணர்
பூஇல் வறுந்தலை போலப் புல்லென்று
இனைமதி வாழியர் நெஞ்சே! மனைமரத்து
எல்லுறும் மௌவல் நாறும்
பல்இருங் கூந்தல் யாரளோ நமக்கே? (19)

உணர்ப்பு வயின் வாரா ஊடற்கண், தலைமகன் சொல்லியது.

- பரணர்

## 4. நெய்தல்

ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து -
அளியதாமே - கொடுஞ்சிறைப் பறவை,
இறைஉற ஓங்கிய நெறிஅயல் மராஅத்த
பிள்ளை உள்வாய்ச் செரீஇய
இரை கொண்டமையின் விரையுமால் செலவே. (92)

காமம் மிக்க கழிபடர் கிளவியால், பொழுது கண்டு சொல்லியது.

- தாமோதரன்

3. மருதம் - ஆசிரியர் - பரணர்

காதல் மிகுதியால் தலைவியின் உடலை போக்க தலைவன் உரியது.

"எவ்வி என்னும் வள்ளல் இறந்து விட்டமையால் பாணர்கள் வறுமையில் வாடியுள்ளனர். தலையில் பூ இன்றி வறுமையில் உள்ளது அப்படி தலைவியின் துயரில் காணப்படுகிறது. என் நெஞ்சு வறுமையாய் துயரில் காணப்படுகிறது. வீட்டுத் தோட்டத்தில் மலர்ந்த முல்லைப் பூக்கள் சூடிய இத்தலைவி நமக்கு யாரோ? என்று தன் நெஞ்சோடு பேசுகிறான் தலைவன்.

4. நெய்தல் - ஆசிரியர் - தாமோதரன்

காதல் மிகுதியால் சூழலைக்கண்டு தலைவி தன் உள்ளத்தை வெளிப்படுத்தியதாக இப்பாடல் அமைந்துள்ளது. ஞாயிறு தோன்றும் அகன்ற வானத்தில் அமைந்துள்ளது. ஞாயிறு தோன்றும் அகன்ற வானத்தில் வலிமையான சிறகுகளை உடைய பறவையானது, தேடிக் கொணர்ந்து தன் குழந்தையின் இரையை வாயில் கொடுக்கும். என்று அழகான உவமையைக் கூறி புலவர் தலைவியின் விருப்பத்தை தானும் தலைவனோடு சேர்ந்து பிள்ளைகளோடு வாழ வேண்டும் என்று தலைவியின் உளக்கருத்தை வெளிப்படுத்துகிறார்.

## 5. பாலை

‘வினையே ஆடவர்க்கு உயிரே; வாள் நுதல்
மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர்’ என,
நமக்கு உரைத்தோரும் தாமே,
அழாஅல் - தோழி! - அழுங்குவர் செலவே. (135)

‘தலைமகன் பிரியும்’ என வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

- பாலைபாடிய பெருங்கடுங்கோ

## 5. பாலை - ஆசிரியர் பெருங்கடுங்கோ

இப்பாலைத் திணைப்பாடல் ஆண்மகனின் கடமையையும், பெண்ணின் அன்பையும் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கின்றது.

தோழி கூற்றாக இப்பாடல் அமைந்துள்ளது. தலைவனை பிரிய நேருமோ என்ற வருத்தத்தில் இருந்த தலைவிக்கு தலைமகன் 'பொருள் தேடுதல்' என்பது ஆடவரின் இன்றியமையாத கடமை ஆகும். வினை செய்து பொருள் ஈட்டுதல் ஆடவரின் உயிர் என்றும் அவ்வாடவரை உயிராக மதிப்பவள் இல்லத்தரசி என்றும் மரபைப் பற்றி தலைவன் அறிந்திருக்கிறார். எனவே அவர் உன்னைப் பிரிந்து செல்வதைத் தவிர்ப்பார் எனத் தோழி தலைவிக்கு கூறுகிறாள்.

# 2. நற்றிணை

நல்லதிணை எனப் பொருள்படும். நற்றிணை ஒன்பது முதல் பன்னிரண்டு அடி வரையுள்ள 400 அகவற்பாக்களின் தொகுதியாகும். 175 புலவர்களால் பாடப் பெற்ற, இந்நூலைத் தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்பவன் ஆவான். தொகுத்தவர் பெயர் தெரியவில்லை. இது நற்றிணை நானூறு எனவும் வழங்கப்படுகிறது.

## 1. பரணர்

நீர்வளர் ஆம்பல் தூம்புடைத் திரள்கால்
நாருரித் தன்ன மதனின் மாமைக்
குவளை அன்ன ஏந்தெழில் மழைக்கண்
திதலை யல்குற் பெருந்தோட் குறுமகட்
கெய்தச் சென்று செப்புநர்ப் பெறினே,
'இவர் யார்?' என்குவள் அல்லள் முனாஅது,
அத்தக் குமிழின் கொடுமூக்கு விளைகனி
எறிமட மாற்கு வல்சி யாகும்
வல்வில் லோரி கானம் நாறி
இரும்பல் ஒலிவருங் கூந்தல்
பெரும்பே துறுவள்யாம் வந்தனம் எனவே, (06)

திணை : குறிஞ்சி

துறை : இஃது, இரவுக் குறிப்பாற்பட்டு ஆற்றானாய தலைவன், தோழி கேட்பத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

## 2. நற்றிணை

### 1. பரணர் - பாடிய பாடல்

குறிஞ்சித் திணைப் பாடல் பரணர் பாடியது.

இரவுக் குறிப்பாற்பட்டு ஆற்றானாய தலைவன், தோழி கேட்ப தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

நீரில் வளர்கின்ற அல்லியின் உள்ளே துளை உடைய திரண்ட தண்டினை நாருரித்தாற் போன்ற பசலை படர்ந்த மாநிறம், குவளை போன்ற குளிர்ந்த கண், திதலையுடைய அல்குல் பெரியதோள் ஆகியவற்றைக் கொண்ட இளம் பெண்ணாகிய தலைவியிடம் நம் வருகையை தெரியாமல் சொல்வார் இருப்பின், அவரை நோக்கி இவர் யார் என்று அவள் கேட்கமாட்டாள். வழியிலே உள்ள குமிழ மரத்தின் வளைந்த கேக்கையுடைய முற்றிய கனிகள் கீழே உதிர்ந்து அங்குக் கிடந்து மரையாவும் இளமானுக்கு வெறுப்பில்லாது உணவாகும். வல்வில் ஓரியின் இத்தகைய காடு போல மணம் வீசுவதும் கருமையாயிரு திரண்டு தழைத்ததுமாகிய கூந்தலையுடைய தலைவி 'யாம் வந்துள்ளோம்' என்று தெரிந்தால் மகிழ்ச்சியால் பெரிதும் மயக்கம் அடைவாள். அப்படிச் சென்று உறுவாரை யாம் பெறவில்லையே என்று தலைவன் வருந்தினான்.

## 2. ஓரம்போகியார்

முழவுமுகம் புலர்ந்து முறையின் ஆடிய
விழவொழி களத்த பாவை போல
நெருநைப் புணர்ந்தோர் புதுநலம் வெளவி
இன்றுதரு மகளிர் மென்தோள் பெறீஇயர்
சென்றீ பெரும சிறக்கநின் பரத்தை
பல்லோர் பழித்தல் நாணி வல்லே
காழின் குத்திக் கசிந்தவர் அலைப்பக்
கையிடை வைத்தது மெய்யிடைத் திமிரும்
முனியுடைக் கவளம் போல நனிபெரிது
உற்றநின் விழுமம் உவப்பேன்
மற்றுங் கூடும் மனையடி துயிலே (360)

திணை : மருதம்

துறை : பரத்தையிற் பிரிந்த தலைமகனைத் தோழி, தலைமகள் குறிப்பறிந்து, வாயில் மறுத்தது, தலைமகள் ஊடிச் சொல்லிய தூஉம் ஆகும்.

## 2. ஓரம் போகியார் (புலவர்)

நற்றிணையின் மருத நிலப்பாடல். பரத்தையில் பிரிந்த தலைமகனிடம் தலைவி ஊடல் கொள்கிறாள். தலைவியின் ஊடலை அறிந்த தோழி வாயில் மறுக்கிறாள். அப்போது தலைவி கூறுவதாக அம் மருத நிலப்பாடல் அமைகிறது. பாகன பாகன் துன்புறுத்தியதால், கோபம் கொண்ட யானை தன் துதிக்கையில் எடுத்த உணவுக் கவளத்தை, தன் உடல் மீது இறைத்து வீணாக்குகிறது. உணவுக் கவளம் போன்ற தலைவனின் அழகு, அவன் பரத்தையிடம் சென்றதால் தலைவிக்கு பயன் இல்லாமல் போனது என்ற உவமையை அமைத்துப் பாடியுள்ளார் புலவர். 'நேற்று பரத்தையிடம் சென்ற நீ இன்றும் செல்வாயாக' என்று தலைவி ஊடலில் கூறுகி-றாள்.

# 3. அகநானூறு

அகப் பொருளைப் பற்றிக் கூறுவது ஆதலால் அகநானூறு என்று பெயர் பெற்றது. இது நானூறு பாடல்களைக் கொண்டது. இந்நூலுக்கு 'நெடுந்தொகை' என்ற மற்றொரு பெயரும் உண்டு.

அகநானூற்றுப் பாடல்கள் பதின்மூன்று அடிகளுக்குக் குறையாமலும் முப்பத்தொரு அடிகளுக்கு மேற்படாமலும் உள்ளவை.

இந்நூல் மூன்று பகுதியாக அமைந்திருக்கின்றது. முதற்பகுதி களிற்றியானை நிரை; இரண்டாம் பகுதி மணிமிடை பவளம்; மூன்றாம் பகுதி நித்திலக்கோவை.

இந்த நானூறு பாடல்களைத் தொகுத்தவர் உருத்திரசன்மர். இதைத் தொகுப்பித்தவன் உக்கிரப் பெருவழுதி என்னும் பாண்டிய மன்னன்.

## 1. நெய்தல்

பெருநீர் அழுவத் தெந்தை தந்த
கொழுமீன் உணங்கல் படுபுள் ஓப்பி
எக்கர்ப் புன்னை இன்னிழல் அசைஇச்
செக்கர் ஞெண்டின் குண்டளை கெண்டி
ஞாழல் ஓங்குசினைத் தொடுத்த கொடுங்கழித்
தாழை வீழ்கயிற் றூசல் தூங்கிக்
கொண்டல் இடுமணல் குரவை முனையின்
வெண்டலைப் புணரி ஆயமொ டாடி
மணிப்பூம் பைந்தழை தைஇ யணித்தகப்
பல்பூங் கானல் அல்கினம் வருதல்
கவ்வை நல்லணங் குற்ற இவ்வூர்க்
கொடிதறி பெண்டிர் சொற்கொண் டன்னை
கடிகொண் டனளே தோழி பெருந்துறை
எல்லையும் இரவும் என்னாது கல்லென
வலவன் ஆய்ந்த வண்பரி
நிலவுமணல் கொட்குமோர் தேருண் டெனவே!

(களிற்றியானை நிரை, பாடல் எண். 20).

பாடியவர் : உலோச்சனார்

துறை : பகற்குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தானாக, தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய், தலைமகன் கேட்பச் சொல்லியது.

# 3. அகநானூறு

## 1. நெய்தல்

தோழி கூற்றாக அமைந்தது இந்த நெய்தல் திணைப் பாடல். தலைவியுடன் களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவன், தலைவியை சந்திக்க வருகின்றான் அப்பொழுது ஊரார் அலர் பேசுவதால் தலைவியின் தாய் அவளை வீட்டுக்காவலில் வைத்துள்ளாள் என்பதை தலைவன் கேட்கும்படியாக தோழி கூறியது.

நண்டின் ஆழமான வளைகளை அகழ்ந்தும் தாழையின் விழுதுகளில் ஊஞ்சல் கட்டி ஆடியது காற்று ஒலித்த மணலில் இரவை ஆடியது; என தலைவனும் தலைவியும் விளையாடியதைக் கூறி கடற்கரையின் அழகும், தாழை மரம், உப்பங்கழி - என நெய்தல் நில வர்ணனைக் காணப்படுகிறது.

தலைவியைப் பற்றி ஊரார் மக்கள் அலர் கூறுதல் தாயின் செவியால் விழ, வளமான குதிரைக-ளை உடைய வலிமையான தேரை உடைய தலைவன் வருகிறான்' என்பதை தாய் அறிந்து தலைவியை வீட்டுக் காவலில் வைத்துவிட்டாள்' என்பதை தலைவியிடம் பேசுவது போல் தலைவன் செவிகளில் பட உணர்த்தியது.

## 2. பாலை

உண்ணா மையின் உயங்கிய மருங்கின்
ஆடாப் படிவத் தான்றோர் போல,
வரைசெறி சிறுநெறி நிரைபுடன் செல்லுங்
கான யானை கவினழி குன்றம்
இறந்துபொருள் தருதலும் ஆற்றாய் சிறந்த
சில்லைங் கூந்தல் நல்லகம் பொருந்தி
ஒழியின் வறுமை யஞ்சுதி அழிதகவு
உடைமதி வாழிய நெஞ்சே நிலவென
நெய்கனி நெடுவேல் எஃகிலை யிமைக்கும்
மழைமருள் பஃறோல் மாவண் சோழர்
கழைமாய் காவிரிக் கடல்மண்டு பெருந்துறை
இறவொடு வந்து கோதையொடு பெயரும்
பெருங்கட லோதம் போல
ஒன்றில் கொள்ளாய் சென்றுதரு பொருட்கே.

*(மணிமிடை பவளம், பாடல் எண். 123).*

பாடியவர் : காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்.

துறை : தலைமகன் இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

## 2. பாலை

பொருள் தேட தலைவன், தலைவியைப் பிரிந்து செல்கி-
றான். இடைக்காலத்தில் தலைவியை நினைத்து வருந்தும்
நெஞ்சிற்குக் கூறியது.

உண்ணாமல் உடல் வருந்திய வயிற்றினையும்
நீராடாத விரதத்தினையும் உடைய தவசி (தவம் செய்பவர்)
போல் மலைகளுக்கிடையே செல்லும் சிறிய வழிகளில்
கூட்டமாக செல்லும், அவ்வழியில் யானைகளின் அழகு
அழியும். அவ்வழியில் தலைவன் பொருள் தேடச்
செல்கிறான், "தலைவியோடு சேர்ந்து இ
பொருள் தேடாமல் இருந்தால் வறுமை வருமோ என
அஞ்சுகிறாய், சோழர்களின் வளமிக்க காவிரி
பெருங்கரையில் இறால் மீனோடு வந்து, மாலையோடு
திரும்பும் கடல் வெள்ளம் போல (மனமே)- நெஞ்சே
நீ அலைபாய்கிறாய். தலைவனைப் பிரிந்து செல்லவும்
மனம் இல்லாமல்; பொருள் தேடச் செல்லவும் முடிவு
எடுக்காமல் நெஞ்சே நீ தடுமாறுகின்றாயே - என்று
தன் நெஞ்சிடம் தலைவன் கூறுவதாக இப்பாடல்
அமைந்துள்ளது.

# 4. கலித்தொகை

கலித்தொகை - கலிப்பாக்களின் தொகுப்பு. இக்கலித்தொகைப் பாடல்கள் ஐந்து பகுதிகளாக அமைந்துள்ளன. ஐந்தும் தனித்தனிப் புலவரால் பாடப்பட்டவை. முதலாவதாக அமைந்த பாலைக் கலியைப் பாடியவர் பெருங்கடுங்கோ. குறிஞ்சிக் கலியைப் பாடியவர் கபிலர். மருதக்கலியை மருதன் இளநாகனாரும், முல்லைக் கலியை சோழன் நல்லுருத்திரனும் பாடியுள்ளனர். கலித்தொகையின் இறுதியாக அமைந்த நெய்தல்கலியினை நல்லந்துவனார் பாடியுள்ளார்.

## 1. முல்லைக்கலி

### தோழி கூற்று

ஆயரிளைஞர் ஏறுதழுவ, ஆயரிள மகளிர் தாம் ஆவலுடன் உரையாடும் காட்சி இது. தலைவியின் காதல் நிறைவுறும் என்பதைத் தோழி கூறுகின்றாள்.

தளிபெறு தண்புலத்துத் தலைப்பெயற் கரும்பீன்று,
முளிமுதற் பொதுளிய முட்புறப் பிடவமுங்
களிபட்டா னிலையேபோற் றடவுபு துடுப்பீன்று,
ஞெலிபுட னிரைத்த ஞெகிழிதழ்க் கோடலு

மணிபுரை யுருவின காயாவும் பிறவு
மணிகொள மலைந்த கண்ணியர் தொகுபுடன்,
மாறெதிர் கொண்டதம் மைந்துட னிறுமார்
சீறரு முன்பினோன் கணிச்சிபோற் கோடுசீஇ,
யேறு தொழூஉப் புகுத்தன ரியைபுட னொருங்கு;

அவ்வழி, முழக்கென விடியென முன்சமத் தார்ப்ப
வழக்குமாறு கொண்டு, வருபுவரு பீண்டி
நறையொடு துகளெழ நல்லவ ரணிநிற்பத்
துறையு மாலமுந் தொல்வலி மராஅமு
முறையுளி பராஅய்ப், பாய்ந்தனர் தொழூஉ;
மேற்பாட் டுலண்டி னிறனொக்கும் புன்குருக்க

ணோக்கஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாக்குத்திக்
கோட்டிடைக் கொண்டு குலைப்பதன் றோற்றங்கா
ணஞ்சீ ரசையியல் கூந்தற்கை நீட்டியா



னெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவட்டன்
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்;

சுடர்விரிந் தன்ன சுரிநெற்றிக் காரி
விடரியங் கண்ணிப் பொதுவனைச் சாடிக்
குடர்சொரியக் குத்திக் குலைப்பதன் றோற்றங்காண்
படரணி யந்திப் பசுங்கட் கடவு
ளிடரிய வேற்றெருமை நெஞ்சிடந் திட்டுக்
குடர்கூளிக் கார்த்துவான் போன்ம்;

செவிமறை நேர்மின்னு நுண்பொறி வெள்ளைக்
கதனஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாடி,
நுதிநுனைக் கோட்டாற் குலைப்பதன் றோற்றங்கா

ணாரிரு ளென்னா னருங்கங்குல் வந்துதன்
றாளிற் கடந்தட்டுத் தந்தையைக் கொன்றானைத்
தோளிற் றிருகுவான் போன்ம்;
எனவாங்கு,

அணிமாலைக் கேள்வற் றரூஉமா ராயர்
மணிமாலை யூதுங் குழல்;
கடாஅக் களிற்றினுங் கண்ணஞ்சா வேற்றை
விடாஅதுநீ கொள்குவை யாயிற் படாஅகை
யீன்றன வாயமக டோள்;

பகலிடக் கண்ணியன், பைதற் குழலன்
சுவன்மிசைக் கோலசைத்த கைய னயலது
கொல்லேறு சாட விருந்தார்க்கெம் பல்லிருங்
கூந்த லணைகொடுப்பேம் யாம்;

கோளாள ரென்னொப்பா ரில்லென நம்மானுட்
டாளாண்மை கூறும் பொதுவ னமக்கொருநாட்
கோளாள னாகாமை யில்லை யவற்கண்டு
வேளாண்மை செய்தன கண்;

ஆங்கு, ஏறும் வருந்தின வாயரும் புண்கூர்ந்தார்
நாறிருங் கூந்தற் பொதுமகளி ரெல்லாரு
முல்லையந் தண்பொழில் புக்கார் பொதுவரோ
டெல்லாம் புணர்குறிக் கொண்டு.

(பாடல் எண் : 101

# 4. கலித்தொகை

## முல்லைக்கலி

1. தோழி கூற்று:

விளக்கம்: தோழி தலைவிக்கு ஏறு தழுவுதலைச் சுட்டிக் காட்டுத்

தலைவிக்குத் தோழி, ஆயர் ஏறுதழுவண்மை காட்டி, அதுகண்டு அவள் வருந்தாமல் இருக்க, தாம் ஆண்டுப் பெற்ற நன்னிமித்தங்களைக் கூறினள். தம் சுற்றத்தார் கூறிய கூற்றினையும் தெரிவித்து, தலைவன் பின்னும் ஒரு நாள் வந்து ஏறு தழுவி, நம்மை வரைந்து கொள்வான் என்று கூறித் தலைவியை ஆற்றுவித்தனள்.

மழை பெய்தமையால் நிலம் குளிர்ந்துள்ளது. அந்நிலத்தே கார்காலத் தொடக்கத்தே பெய்த முதல் மழையால், உயர்ந்து சிறு செடிகளிடத்தே அரும்புகள் தோன்றின. முல்லைப் புறத்தே உடைய பிடவம், அலர்ந்த இதழ்களைக் கொண்ட செங்காந்தள், நீலமணி போன்ற காயா போன்ற பூக்களையும் அழகுறத் தொடுத்துக் கண்ணியாகச் சூடியிருந்தனர் ஆயர் இளைஞர். அவர்கள் ஒருசேரக் கூடி, ஏறு தழுவாரோடு தம் ஆற்றலையும் வெளிப்படுத்த நின்றனர். மகட் கொடை நேர்ந்த ஆயர்கள், வலியுடையோனாகிய இறைவனின் இந்தாலப் படை போலக் கொம்புகள் சீவப்பட்ட ஏறுகளை ஒரு சேரத் தொழுவினுள் புகவிட்டனர். அவ்விடத்தே மழை முழக்கம் போலவும் இடி முழக்கம் போலவும் ஆரவாரம் எழ, ஏறு தழுவியவர்க்குத் தன் மகளைத் தருவேன் என்ற வழக்கப்படி, அனைவரும் திரண்டு நின்றனர்.

## தோழி தலைவக்குக் கூறியது:

புள்ளிய நிறத்தைக் கொண்ட ஏற்றின் நோக்கை அஞ்சாது பாய்ந்தான் ஓர் ஆயர் இளைஞன். அவனைக் காலக்குத்தி அவனுடலைக் கிழிக்கின்ற எருதினது தோற்றம் காண்பாய். அத்தோற்றம் துச்சாதனின் நெஞ்சை பிளந்து பகைவர் நடுவே தன் வஞ்சினத்தை நிறைவேற்றிய வீமனைப் போன்றிருந்தது. கரிய எருது பொதுவனைச் சாடி உடர் சரியக் குத்திக் குலைப்பதன் தோற்றம் காண்பாய். அத்தோற்றம் ஊழி முடிவிலே கடவுள் கூற்றுவனை நெஞ்சு பிளந்து குடரைக் கூளிக்கு இட்டு அதன் வயிற்றை நிரப்புவது போன்றிருந்தது.

செவியிலே மறுவினையும், உடலில் நுண்ணிய சிவந்த புள்ளிகளையும் உடைய வெள்ளை எருதின் சினத்தைப் பொருட்படுத்தாது பாய்ந்த பொதுவனை, அவ்வெருது சாடி, கொம்பின் நுனியினால் குத்திக் குலைப்பதன் தோற்றம் காண்பாய். இங்ஙனம் தோழி காட்டக் கண்டு நம் காதலற்கும் இங்ஙனம் ஆகுமோ எனத் தலைவி அஞ்சினாள். அந்நிலையில் அங்கு உண்டான நன்னிமித்தம் கண்டு தோழி தலைவியின் அச்சத்தைப் போக்க கூறுகின்றாள்.

ஆயர்கள் குழலினை ஊதுகின்றனர் நன்னிமித்தம் பார் என்று நீ அஞ்சாதே என்றாள் தோழி. மதங்கொண்ட களிற்று யானையினும், மிகுந்த வலியுடைய ஏற்றை நீ கைநெகிழவிடாது வெற்றி கொள்வாய். நீ அவ்வாறு செய்தால் எம் ஆயமகள் தோள் மாலையும் வெற்றிக் கொடியைப் பெற்றதாகும் என்று தோழி தலைவனிடத்து கூறினாள்.

தலைவனைக் கண்டு எம் கண்கள் உதவி செய்தன. அதனால் ஏறுதழுவும் வன்மையுடையவர் என்னைப் போல் யாரும் இல்லை. என நம் பசுக் கூட்டத்திலே நின்று தன் முயற்சியையும் ஆண்மையையும் உரைக்கின்ற தலைவன், வரும் நாளில் ஏறுதழுவி நம்மைப் பெறாமல் போகமாட்டான் என்றாள் தோழி.

அத்தொழுவிலுள் எருதுகள் வருந்தின. ஆயரும் ஏறு தழுவப் புண்பெற்றனர். பொதுவரோடு புணர்தற்குரிய நன்மைத்தங்களைப் பெற்றமையான், நறிய உந்தலையுடைய ஆய மகளிர் எல்லோரும் முல்லை மலர்ந்துள்ள தண்பொழில் -லகத்துப் புக்கனர். நாமும் பொழிலிடத்தே விளையாடுதற்குப் போவோமாக என்றாள் தோழி.

## 2. பாலைக்கலி

### தோழிகூற்று

'ஏதோ பொருள் தேடி வருவேன் என்றீரே அப்பொருளால் என்னதான் நன்மையோ? பொருளோடு நீர் திரும்பிவரும்போது, அதற்குள் போய்விடும் இவள் உயிர். உயிரை மீட்டுத் தரும் சக்தியும் அப்பொருளுக்கு உளதாமோ?' என்று கேட்கிறாள் தோழி. ஆகவே, போக்கை நிறுத்து என்பது முடிபு.

"வேனி லுழந்த வறிதுயங் கோய்களிறு
வானீங்கு வைப்பின் வழங்காத்தேர் நீர்க்கவாஅங்
கானங் கடத்தி ரெனக்கேட்பின், யானொன்
றுசாவுகோ வைய சிறிது;

நீயே, செய்வினை மருங்கிற் செலவயர்ந் தியாழநின்
கைபுனை வல்வில் ஞாணுளர் தீயே
இவட்கே, செய்வுறு மண்டில மையாப் பதுபோன்
மையில் வாண்முகம் பசப்பூ ரும்மே;

நீயே, வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப்
புனைமாண் மரீஇய அம்பு தெரிதியே;
இவட்கே, சுனைமா ணீலங் காரெதிர் பவைபோ
லினைநோக் குண்கண் ணீர்நில் லாவே;

நீயே, புலம்பி லுள்ள மொடு பொருள்வயிற் செலீஇய
வலம்படு திகிரி வாய்நீ வுதியே
இவட்கே, அலங்கிதழ்க் கோடல் வீயுகு பவைபோ
லிலங்கே ரெல்வளை யிறையூ ரும்மே;
எனநின்;

சென்னவை யரவத்து மினையவ ணீநீப்பிற்
றன்னலங் கடைகொளப் படுதலின் மற்றிவ
ளின்னுயிர் தருதலு மாற்றுமோ
முன்னிய தேஎத்து முயன்றுசெய் பொருளே."

(பாடல் எண் : 7)

2. பாலைக்கலி:

தோழி கூற்று :

விளக்கம் : தலைவன் தான் பிரிந்து செல்ல இருப்பதைத் தோழிக்கு உணர்த்தினான். அவள், தலைவியிடத்துக் கூறின் தலைவர்க்கு முன்னர் நிகழ்ந்தவற்றை நும்மோடு ஆராய்ந்து பார்த்தேன். நீர் ஈட்டும் பொருள் இவள் உயிரைக் கொண்டு வருமோ? எனக் கூறிச் செலவைத் தடுத்தாள் தோழி.

முதுவேனிற் காலத்தின் வெப்பத்தால் வருந்தின, உடல் சிறிதாக வருந்தும் ஓய்ந்த களிறுகள். மழை இல்லாமையால் கொடுமையை உடைய ஊர்களிடத்து, உண்ணுதற்கு நீர் இல்லாததினால் பேய்த் தேரைத் தண்ணீர் என்று கருதி விரும்பிச் செல்லும்படியான காடு. அக்காட்டைக் கடந்து சென்று பொருள் தேடி வருவேன் என்றீர். கேட்டேன். நீர் செல்லும் காலத்து அவளுக்கு நிகழக் கூடியதொன்றை, சிறிது உம்மோடு பேசுவோமா.

ஐய நீ செய்யும் காரியத்தின் செவ்விணை மனத்தினை எண்ணி, நின்னுடைய, கையால் வரிந்து கட்டப்பெற்ற வில்லின் நாணைத் தடவா நின்றாய். அச்சமயத்தில் இவட்கு, மறுவற ஒளி செய்தலுடைய மதியடத்தே, மேகம் பரவுகின்ற தன்மை போல, மறுவவில்லாத ஒளியுடைய முகத்தே பசப்புப் பரவா நிற்கும்.

நீ தொழில் மாண்புடைய கைச்சாட்டை இறுகக் கட்டிப் புனைதற் சிறப்புடைய அம்புகளைத் தேர்ந்து நின்றாய். அச்சமயத்தில் இவட்கு, துணையிடத்து மாண்புடன் விளங்கிய நீலம், மழையை எதிர்கொண்டு நீர் சொரியுமாறு போல, வருந்தும் பார்வையினை உடைய மையுண்ட கண்களில் நீர் நில்லாதாகி வீழும். நீயே, பரிகின்றோம் என்ற தன்மை உணராத நெஞ்சத்தோடு, பொருள் ஈட்டுவான் செல்ல வெற்றியைத் தரும் சக்கரத்தின் வாயைத் துகள் போகத் துடைத்து நின்றாய். அச்சமயத்தில் இவட்கு வளை முன்கையினின்றும் வீழா நிற்கும்.

நீ எம்மைப் பிரிதலான்ற நின்னுடைய குற்றத்தின் காரணமாக உண்டாகின்ற ஆரவாரம் இத்தன்மையளாய இவள் நீ நீங்குவையாயின், தன்னுடைய நலம் முடிவடைதலின் இவள் இறந்துபடுவள். நின்னை ஒன்று வேண்டுவன். நீ கருதிச் செல்லும் தேயத்துச் சென்று முயன்று ஈட்டும் பொருள், இன்பம் தருதலேயன்றி, இழந்த இவள் இனிய உயிரை மீட்டுத் தருதலைச் செய்யுமோ.